KSA-I-M

# முதலாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

மதிப்பெண்: 100

தமிழ்

வகுப்பு - எட்டு - ____________

நேரம்: 2.30மணி

---

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** 15 × 1 = 15

1. குறிப்பு வினையெச்சம் ______________ வெளிப்படையாகக் காட்டாது.
   அ) காலத்தை ஆ) வினையை இ) பண்பினை
2. உடல் எடை அதிகரிப்பால் ஏற்படும் நோய்களுள் ஒன்று ______________
   அ) தலைவலி ஆ) காய்ச்சல் இ) இரத்தக்கொதிப்பு
3. 'நலமெல்லாம்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________
   அ) நலம் + எல்லாம் ஆ) நலன் + எல்லாம் இ) நலம் + எலாம்
4. உடல்நலம் என்பது ______________இல்லாமல் வாழ்தல் ஆகும்.
   அ) அணி ஆ) பிணி இ) பணி
5. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ______________
   அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை இ) நடுவுநிலைமை
6. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ______________
   அ) செல்க ஆ) ஓடு இ) வாழ்க
7. 'பால் + ஊறும்' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
   அ) பால்ஊறும் ஆ) பாலூறும் இ) பால்லூறும்
8. 'செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ) செ + திறந்த ஆ) செத்து + திறந்த இ) செத்து + இறந்த
9. 'ஓடை + ஆட' என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ______________
   அ) ஓடைஆட ஆ) ஓடையாட இ) ஓடையோட
10. வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் ______________
    அ) தலை ஆ) மார்பு இ) மூக்கு
11. தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ______________ காரணமாக அமைந்தது.
    அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) அச்சுக்கலை

12. ‘ஐம்பால்’ என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ______________

அ) ஐம் + பால் ஆ) ஐந்து + பால் இ) ஐம்பது + பால்

13. முற்றுப் பெறாமல் எஞ்சி நிற்கும் சொல் ______________ எனப்படும்.

அ) முற்று ஆ) எச்சம் இ) முற்றெச்சம்

14. காந்தியடிகள் ______________ போற்ற வாழ்ந்தார்.

அ) நிலம் ஆ) வையம் இ) வானம்

15. நீலகேசி கூறும் நோயின் வகைகள் ______________

அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து

**II. பொருள் கூறுக.** 5 × 1 = 5

16. இசை 17. விசும்பு 18. ஈரம் 19. காலன் 20. நாவாய்

**III. நயம் அறிக.** 10

21. ‘வருமுன் காப்போம்’ பாடலில் இடம்பெற்றுள்ள எதுகை, மோனை, இயைபுச் சொற்களை எடுத்து எழுதுக.

**IV. மனப்பாடப்பாடல்.** 4 + 2 = 6

22. வாணிதாசனின் ‘ஓடை’ பாடலை அடிபிறழாமல் எழுதுக.

23. ‘படும்’ என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**V. வினாவிற்கு விடையளி.** 1 × 5 = 5

24. சாலை வசதி வேண்டி விண்ணப்பம் வரைக.

**VI. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.** 10 × 2 = 20

25. ‘அழகிய மரம்’ - எச்ச வகையை விளக்குக.

26. தமிழர் மருத்துவத்தில் மருந்துகளாகப் பயன்படுவன யாவை?

27. அதிகமாக உண்பதால் ஏற்படும் தீமையாகக் கவிமணி குறிப்பிடுவன யாவை?

28. நீலகேசியில் பிறவித் துன்பத்தைத் தீர்க்கும் மருந்துகளாகக் கூறப்படுவன யாவை?

29. சான்றோர்க்கு அழகாவது எது?

30. வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?

31. விலைகொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?

32. புயல்காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?

33. ஓவிய எழுத்து என்றால் என்ன?

34. செய்யுளில் மரபுகளை ஏன் மாற்றக் கூடாது?

35. பாரதியார் பற்றி சிறுகுறிப்பு வரைக.

36. எச்சம் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?

**VII. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 3 = 15

37. நோய்கள் பெருகக் காரணம் என்ன?

38. உடல் நலத்துடன் வாழக் கவிமணி கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

39. நீர்நிலைகள் குறித்து சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.

40. “வெட்டுக்கிளியும் சருகுமானும்” கதையைச் சுருக்கி எழுதுக.

41. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?

42. ஆரோக்கியமான வாழ்வு வாழ நாம் செய்ய வேண்டியதை தொகுத்து எழுதுக.

**VIII. வினாவிற்கு விடையளி.** 1 × 5 = 5

43. தமிழர் மருத்துவத்தின் சிறப்புகளாக மருத்துவர் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

**IX. வினாக்களுக்கு ஏற்ப விடையளி.** 19

44. அ) நடக்கிறது ஆ) உறங்கினாள் இ) பேசினாள்
ஈ) பயின்றாள் உ) கேட்டார்
(வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக.)

45. அ) 28 ஆ) 6 இ) 9 ஈ) 3 உ) 30
(தமிழ் எண்களை எழுதுக.

46. அ) ப___ ___ ___ ___வன் ஆ) ந___ ___ப___ ___வி
இ) க___ ___தபெ___ ___ன் ஈ) எ___ ___ம்வ___ ___ன்
உ) கூ___ ___துமா___ ___து
(ஜோடி எழுத்துகளை நிரப்புக.)

47. அ) மாதம் ஆ) படம் இ) பூ ஈ) வாழ்த்து
(பன்மை விகுதியை சேர்த்தெழுதுக.)